2

# சுடர்







15, மார்ச்
1981

25 காசு

FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010

With Best Compliments from

Established : 1904 Phone : 21919

**OFFICE EQUIPMENT CO.,**

2, ARMENIAN STREET,

MADRAS-600 001

**Quality Stationers and Book Sellers**


## நமது வாசகர்கள்



* விரசங்களை வியாபாரமாக்கிட புற்றீசல் போல் புறப்பட்டுள்ள பத்திரிகைகளுக்கு மத்தியில் இது ஒரு வித்தியாசமான பத்திரிகை. 'குட்டி'ப் பத்திரிகை என்றாலும் வளர்ந்தவர்களின் தலையில் குட்டிடும் தகுதி இதற்குண்டு. **—ஆணையூர் இஸ்மாயில்**

* இது வீட்டில் வைத்திருக்கக்கூடிய குடும்பப்பத்திரிகையாய் லட்சணமாய் இல்லை. புகை ஒழிப்புக் கட்டுரையைப் படித்து விட்ட என் மனைவி என்னை வறுத்து எடுத்துவிட்டாள். கட்டுரைகளின் சுட்டித்தனம் தாங்க முடியவில்லை. ஆளை விடுங்கள். **—கே. அருணாசலம், சென்னை-17**

* சுட்டி இதழ் எங்கு தவறு நிகழ்ந்தாலும் சுட்டிக்காட்டும் என்றால் அது ஒன்றே என் போன்ற ஆயிரமாயிரம் எழுத்துலக வெறியர்கட்கு, தாகவெறி தீர்க்கும் தனி மருந்தாக அமையும். **—சிந்தனையாளன், சென்னை-17**

* சுட்டித்தனமான பெயரை வைத்து, குழந்தை பத்திரிகை என எண்ணும்படியாக குழந்தைப் படத்தையும் பிரசுரித்து, இது "குழந்தைகள் பத்திரிகை அல்ல" எனக் குறிப்பிட்ட புதுமையே புதுமை. **—சு. குருமூர்த்தி, சென்னை-33**

**விசிட்டர் லென்ஸில் அனந்த் பதில்: 25-2-81 பக். 29**

தங்களைக் கவர்ந்த சிறு பத்திரிகை, புது பத்திரிகை எது?

'சுட்டி' என்ற ஒரு புதிய - சிறிய - அளவில் பத்திரிகை. 32 பக்கங்கள். 32 செய்திகள். நான் பள்ளி மாணவனாக இருந்தபோது காலணாவுக்கும் அரையணாவுக்கும் வெளியான குழந்தைப் பத்திரிகைகள்தான் நினைவுக்கு வந்தன. ஆனால் இது குழந்தைப்பத்திரிகையல்ல எழுத்துக்களும், கட்டுரைகளும் கூட வித்தியாசமாக, பயனுள்ளதாக இருக்கின்றன. திறமைகள் எங்கெல்லாம் எப்படியெல்லாம் இருக்கின்றன.

FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010

# கோஷ்டிசேரா நாடுகள் மாநாடு சாதித்தவை?

அண்மையில் டில்லியில் கோஷ்டிசேரா நாடுகளின் கூட்டம் நடைபெற்றது. அதாவது ஏற்கனவே ஏதோ ஒரு கோஷ்டியில் சேர்ந்துகொண்ட நாடுகள் பொழுது போக்காகக் கூடின. (கோஷ்டி சேரா நாடுகள் என்ருல் எந்த ஒரு வல்லரசுடனும் சேராதது என்று பொருள்.)

உலகம்



இப்படிக்கூடி "ஆப்கானிஸ்தானில் அந்நியத் தலையீடுகள் கூடாது!" என்று வானத்தைப்பார்த்து வேண்டின. இது ஒரு பகிரங்கமான மோசடி. சோவியத் ரஷ்யாவின் யுத்தப் பிரபுக்கள்தான் ஆப்கானிஸ்தானின் ஆதிபத்திய உரிமையை ராணுவக் குறடுகளால் மிதித்து நசுக்கினுர்கள் என்பது உலகறிந்த விஷயம். ஆனுல் நமது கோஷ்டி சேராத் தலைவர்கள்தான் இந்த உலகத்தில் இல்லையே. இதில் விந்தை என்னவென்ருல் ஆப்கன் பொம்மை அரசின் பிரதிநிதியும் இதில் கலந்துகொண்டது தான்.

கம்போடியாவின் சொந்த அரசைத் தூக்கி எறிந்த வியத்நாமைக் கண்டிக்க நாதியில்லை.

எல்லோருக்கும் நல்லவராக நடக்க முயல்வதாகக் காட்டித் தங்கள் தலையில் தாங்களே மண் அள்ளிப்போட்டுக் கொள்ளாமல் இருந்தால் சரி. ஊதுவதை ஊதி வைப்போம். ஏனெனில் உலகத்தின் திசைவழி நாளையே மறலாம், அப்போது இந்தத் தலைவர்கள் வழி தெரியாமல் திக்குமுக்காடக் கூடாதல்லவா?

# நிலவில் பிறக்கும் முதல் குழந்தை

1990-க்குள் நிலவுக்கு விடுமுறைச் சுற்றுலாவாக சாதாரண மக்களை அழைத்துச் செல்லும் முயற்சியில் அமெரிக்கா ஆர்வம் காட்டி வருகிறது. இதற்கிடையில் நிலவில் முதல் மனிதக் குழந்தையைப் பிறக்க வைக்க ரஷ்யா முந்திக்கொண்டு வருகிறது.



கர்ப்பிணிப்பெண் ஒருவர் நிலவுக்கு அனுப்பப்பட்டு அவரது பிரசவம் அங்கேயே பார்க்கப்படும். இதற்கான நீண்டகால ஆய்வு திட்டம் ஒன்றை விஞ்ஞானிகள் பரிசீலித்து வருகின்றனர்.

அமெரிக்க விண்வெளி ஆய்வுப்பத்திரிகை ஒன்றில் இது தொடர்பாக இத்திட்டக் குழுவின் தலைவரும் ரஷ்யருமான டாக்டர் நிக்கோலாய் விவரித்துள்ளார்.

நிலவுக்கு அனுப்பப்படும் கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றில் வளரும் குழந்தையின் மாறுபாடுகளை டாக்டர்கள் பூமியிலிருந்தவாறு கண்காணிப்பார்கள். மேலும் தம்பதிகளானவிண்வெளிவீரர்களை நிலவுக்கு அனுப்பவும், குழந்தை பிறக்கும் வரை அவர்கள் விண்வெளியில் இருக்கவும் ரஷ்யா ஏற்பாடு செய்து வருகிறது என மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானியான பேராசிரியர் காமின் ஸ்கி என்பவர் கூறுகிருர்.

விண்வெளியில் பிறக்கும் குழந்தை விஷயத்தில் ரஷ்யர்கள் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்குக் காரணம் விண்வெளி பயணத்தில் இனி எதிர்நோக்கப்படும் எல்லா பிரச்சினைகளுக்கும், அங்குப் பிறக்கப்போகும் குழந்தை தீர்வாக அமையும் என அவர்கள் நம்புகின்றனர்.

—*தகவல் : வானம்பாடி*



FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010

*இந்தியா*


## லஞ்சம் தேசிய நோயாய் மாறியதேன்?



அடிப்படையில் விவசாய நாடான இந்தியா பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அவர்களுடைய வர்த்தகக் கொள்கைகளுக்கு ஏற்ப மாற்றப்பட்டது. இதனால் மரபுவழி உற்பத்தியாளர்கள் சிதைந்தனர். பிரிட்டன் வெளியேறியதும் இந்திய முதலாளிகள் உற்பத்தித்துறையைப் புனரமைக்காமல், பிரிட்டன் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தனர். ஒரு சுயேச்சையான தேசீய உற்பத்தி முறை சீரழிந்ததனால் ஒரு சுயேட்சையான போட்டியும் நிலவவில்லை. இரண்டுமே பிரிட்டனைச் சார்ந்திருந்தது. விடுதலை அடைந்தாலும் முதலீடுகள் செய்ய வசதியில்லாமையால் பிற நாடுகளில் இருந்து அரசாங்கத்தின் மூலமாக மூலதன வசதிகளைப்பெற இந்திய முதலாளிகள் விரும்பினர். எனவே இந்திய ஏகபோக மூலதனம் என்பது போட்டிப் பொருளாதாரத்தால் ஏற்பட்டதல்ல. மாறாக அரசாங்கத்தின் மூலமாக விளைந்தது. இதனால் உற்பத்தியாளர்களிடையே உற்பத்தியை நவீனப்படுத்தும் போக்கு இல்லை. அதன் தேவை உணரப்படவில்லை. அதன் பின்னணியாக மீண்டும் மூலதனத்திற்கும் தொழில் நுட்பத்திற்கும் மேலை நாடுகளைச் சார வேண்டியதாயிற்று. இதன் பலனாக உற்பத்திக்கான முதலீடு குறைந்தும் ஒழுங்கற்றும் போயிற்று. ஆனால் உற்பத்திபொருட்களின் விலைகளோ பன்மடங்கு ஏறின அரசின் ஐந்தாண்டுத் திட்டங்கள் அவலைச் சொல்லி உரலை இடித்தன. இப்போக்கின் விளைவாக சிறு உற்பத்தியாளர்கள், விவசாயிகள், இருந்ததை இழந்து நாளுக்கு நாள் ஓட்டாண்டியாகி வருகின்றனர். ஒரு ஸ்“டோ. சோஷலிசம் பிறந்து லஞ்சம் தேசிய நோயாக மாறியது?

*தமிழ்நாடு*

## ஆசிரிய மாணவ போராட்டங்கள்



‘‘மாணவர்கள் இங்கும் அங்குமாகப் போராட ஆரம்பித்துள்ளார்கள். இவர்களுக்கு வேறு வேலையே கிடையாது.’’ என்று சலித்துக் கொள்ளும் சாதாரண மனிதர்களிலிருந்து மக்களால் வேலைக்கு அமர்த்தப்பட்ட மந்திரிகள் வரை இவர்களின் பிரச்சினைகளைக் காண மறுக்கிறார்கள்.

அம்பேத்கார் பள்ளியில் காம்பவுண்ட் சுவர் கிடையாது இதற்கு அரசுகூறும் பதில் ‘சுவர்கட்ட அதிகம் செலவாகும்.’ ஆனால் இதே அரசு தற்காலிக உலகத் தமிழ் மாநாட்டிற்கு கக்கூஸ் கட்ட லட்ச லட்சமாய்க் கொட்டும்.

அரசு கல்லூரிகள் இந்த லட்சணத்தில் உள்ளதென்றால் தனியார் கல்லூரிகளின் நிர்வாகம் மாணவர்களையும் ஆசிரியர்களையும் நடத்தும் விதம் மத்திய கால அடிமைகளை நினைவூட்டுகிறது. மாணவர்களைப் பழிவாங்குவது ஆசிரியர்களை இஷ்டத்திற்குத் தூக்குவது போன்றவை சர்வ சாதாரணம். புதுக்கல்லூரியின் ஹாஸ்டல் நிர்வாகி தங்கிப்படிக்கும் மாணவர்களிடம் தகாத முறையில் நடக்க முயற்சித்துள்ளார். நிர்வாகம் ரௌடிகளை வைத்து ஆசிரியர்களைத் தாக்க முயற்சிகள், இப்படிப்பட்ட காட்டு மிராண்டித்தனங்களை இனியும் பொறுக்க முடியாது என்று மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினால் பிரச்சார சாதனங்களை முடுக்கிவிட்டுத் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தி விடுவது, என்ற போக்கு தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஆகவே சுட்டி பொதுமக்களையும் பெற்றோர்களையும் பொறுப்புடன் கேட்டுக் கொள்வது—நீங்கள் நினைப்பதுபோல் கல்விக் கூடங்கள் கல்விக்கூடங்களாக இல்லை. வர்த்தக நிறுவனங்களாக உள்ளன. இதை மாற்ற மாணவர்கள், ஆசிரியர்கள் நடத்தும் எல்லாப் போராட்டங்களையும் ஆதரியுங்கள்! ஊக்குவியுங்கள்! பங்கெடுங்கள்!

—*நானக்.*

# இப்படியும் QUIZ கேள்விகளா?

அனைத்துக் கல்லூரி மாணவர்கள் பங்குபெறும் "QUIZ CONTEST" மாணவர்களின் அறிவை விருத்தி செய்ய உதவும் என்பதில் எங்களுக்கு அபிப்பிராய பேதம்இல்லாவிட்டாலும், அவை நடத்தப்படுகிற முறைகளில் சில குறைகள் தெரிகின்றன. கிண்டி பொறியியற் கல்லூரியில் 30-1-81ல் நடந்த TECHO FESTIVALலில் கேட்கப்பட்ட ஒரு கேள்வியையும் 2-2-81ம் தேதியன்று A.C. TECHல் நடந்த ALFRESCO FESTIVALலில் கேட்கப்பட்ட கேள்வியையும் மாதிரிக்குக் கோடிட்டுக் காட்டுகிறேன்.



(1) சமீபத்தில் நடந்த ஹிமாலயன் ராலியில் வெற்றி பெற்ற சேகர் மேத்தாவின் கார் ஓட்டுநர் யார்?

(2) ரீகனின் முதல் மனைவியின் பெயரென்ன?

இது மாதிரி கேள்விகள் மாணவர்களின் அறிவுத்திறனைச் சோதிப்பதாக இல்லை.

மாணவர்களின் அறிவை எடைபோடுகிறப்போல் இனியாவது கேள்விகள் கேட்பார்களா ?

இந்தக் கேள்விக்கு இனிவரும் விழாக்களில் இவர்கள் தான் பதில் கூறவேண்டும்! —சுவிசா சிசுபரன்

## இஸமும் ஜனநாயகமும்

உங்களிடம் இரண்டு பசுக்கள் இருந்தால் ஒன்றை மற்றவருக்குக் கொடுப்பது சோஷலிசம். உங்களிடம் இருக்கும் இரண்டு பசுக்களை எடுத்துக்கொண்டு அரசாங்கம் பாலை மட்டும் தருவது கம்யூனிசம். இருக்கும் இரண்டு பசுக்களையும் அரசாங்கம் பிடுங்கிக்கொண்டு உங்களையும் சுட்டுக்கொல்வது பாஸிஸம். உங்களிடமிருக்கும் இரண்டு பசுக்களையும் சட்டத்தை மேற்கோள் காட்டி ஒரு கணிசமான தொகையைக் கொடுத்துப் பெற்றுக்கொண்டு ஒன்றைச்சாகடித்து மற்றொரு பசுவின் பாலைக் கீழேகொட்டிவிட்டு ஹாலந்தில் நல்லவெண்ணெயை விலைகொடுத்து வாங்குவது ஜனநாயகம்.—பாப்கான்

# அமெரிக்காவைப்பார்...

உலக மக்கட்தொகையில் 5% பேர்கள் தான் அமெரிக்கர்கள் (U. S. A.) ஆனால் அவர்கள் உலக வளத்தில் பயன்படுத்துவது—

| | | |
|---|---|---|
| பெட்ரோல், எரிபொருள் | — | 30% |
| இயற்கை வளம் | — | 40% |
| பணம், சொத்து | — | 50% |

இன்று பிறக்கும் ஓர் இந்தியக் குழந்தையைவிட, அமெரிக்கக் குழந்தைக்கு 40 மடங்கு அதிகப் பொருட்கள் தேவையாம்.

1959லிருந்து 1968 வரை (10 ஆண்டுகளில்) அமெரிக்க மக்கள் பயன்படுத்திய உலகச் சொத்துக்கள், மனித வரலாற்றின் தொடக்கத்திலிருந்து 1958 வரை அனைத்து உலக மக்களும் பயன்படுத்திய சொத்தைவிட அதிகம்.

இந்தியாவிலிருந்து, அமெரிக்காவில் பணிபுரியச் செல்லும் ஒரு பொறியியல் வல்லுநரால் நமது நாட்டிற்கு ஏற்படும் இழப்பு ரூ 2,56,000; ஆனால் அமெரிக்கா பெறும் ஆதாயம் ரூ 23,76,000.

காரணம், ஒரு பொறியியலாளரை உருவாக்க இந்தியா செலவழிப்பதை விட 10 மடங்கு அமெரிக்கா செலவிட வேண்டியுள்ளது.

1970ஆம் ஆண்டில் மட்டும் பொறியியலாளரையும், மருத்துவர்களையும் இந்தியா அமெரிக்காவிற்கு அனுப்பியதால் அந்நாடு கண்ட இலாபம் 696.6 கோடி ரூபாய். அதே ஆண்டில் அனைத்து வளர்ந்து வரும் நாடுகளும், அவ்வாறே அமெரிக்காவிற்கு வழங்கிய இலாபம் 2926.6 கோடி ரூபாய்.

நன்றி.: குமுறும் நெஞ்சம்



FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010

# சாக்கடையில் மூழ்கும் சாதுக்கள்

ராயப்பேட்டை போலீஸ் நிலையம் அருகே சாக்கடைத் தண்ணீர் அடைத்துக்கொண்டது. அந்த வெள்ளத்தில் Manhole எனப்படும் சாக்கடைக்குழியில் மூழ்கி மூழ்கிக் குச்சியைக் குத்திச் செலுத்திக் கொண்டிருந்தான் அவன் தலையெல்லாம் முகமெல்லாம் நாம் அருவெறுக்கும் பகர வீகாரம் ஒட்டிக்கொண்டிருந்தது.

அவன் எப்படி ஆனந்தமாக உண்டு உடுத்து வாழ்வான்? தோட்டி துப்புரவாளர்கள் அந்த மலக் குழிகளில் மூழ்காமல் கருவிகளை வைத்துக்கொண்டு தம் பணியைச் செய்ய முடியாதா? அதற்கு விஞ்ஞான முறையில் சாதனங்களைக்கண்டு பிடிக்க முடியாதா? செல்வந்தர் இல்லங்கள் மாவறைக்க க்ரைண்டர்கள், தயிர்கடைய எலக்டிரிக் மத்துகள், ரொட்டி செய்ய சப்பாத்தி செய்ய அவன்கள் இப்படிக் கண்டுபிடித்து விஞ்ஞானமயமாக்கும் பேரறிவாளர்கள் சாக்கடையில் குத்துவதற்கும், அங்கு அடைப்பைச்சரி செய்வதற்கும் விஞ்ஞானக் கருவிகளையும் செய்யமுடியாதா? மேலை நாடுகளில் Drainage System சரியாக வைப்பதற்கு என்ன செய்கிறார்கள் என்று நம் கார்ப்பரேஷன் கனவான்கள் சற்று சிரமம் எடுத்துப் பார்க்கக் கூடாதா?


சாக்கடைத்தோட்டி துப்புரவாளர்களை ஒருநாள் நெருங்கிக்கேட்டபோது அவர்களுக்கு இதெல்லாம் சிந்தனையே இல்லை என்பது தெரிந்தது. 'பக்கத்துக்கடைக்காரர்கள் தலைக்கு ஐந்து கொடுப்பார்கள். அதுதான் எங்களுக்கு எக்ஸ்ட்ரா வருமானம். என்ன செய்வது! எல்லாம் வறுமை தான் காரணம், என்கிறார்கள்.

எல்லாத் தொழில்களும் சமமே. தொழில்களில் வேறுபாடில்லை என்பதெல்லாம் சமுதாயத்தில் மேல் மட்டத்துச் செல்வர்கள் பேசும்வாய் வேதாந்தம். இத்தகைய கஷ்டமான தொழில்களைச் செய்யும் சாதுக்கள் மிரண்டு வெருண்டு வெகுண்டு எழுந்திருக்க வேண்டும். அப்போது காடு கொள்ளாது என்பதைச் சமுதாயம் நினைவில் வைக்கட்டும்.

—சுட்டி பாரதி.

*மசாலா பத்திரிகைகள் :-*

# இதயம் பேசுகிறது



இதன் ஆசிரியர் நைட் கிளப்புகளைப் பற்றி எழுதுவதற்காகவே நாடுகளைச்சுற்றியவர். இவர் பேனா பிடிப்பது தேசிய அவமானங்களில் ஒன்று. பிரபலமான பத்திரிகைகளில் அதிக பின்–அப் போடும் இது ஆளும் கட்சிகளின் ஜால்ரா.

சித்ரகுப்தன் விளம்பரம் கிடைக்குமென்றால் நிர்வாணமாகச் சாலையில் ஓடும் பேர்வழி. சாரு பொறுப்பற்ற விமர்சகர். கலைஞன்—பார்வையாளன்—விமர்சகன் என்ற முப்பரிமாணங்களைச் சாடப்புரிந்து கொள்ளத் திராணியில்லாமல் விமர்சனம்செய்யும் விமர்சகர். இல்லை என்றால் சுஹாசனிக்கு அப்படி ஒரு பதிலை வளைத்து வளைத்துத் தருவாரா!

கதைகளை எடுத்துக்கொண்டால் இந்துமதியின் வேலியோரத்துப் பேத்தல்கள். சிறு கதைகள் பக்க நிரப்பிகள். இவைகளை வெறுத்தவர்கள் யாத்திரை போக தேவிதரிசனம். ஸ்ரீதேவி தரிசனம்....

நமக்குத் தெரிந்து பிரச்சினைகள் இல்லாது கதைகள் கிடையாது. ஆனால் இப்பத்திரிகைக்கோ பிரச்சினைக் கதைகள் என்று தனியாக வானத்தில் இருப்பது மாதிரியும் அதை எழுதத் தனியே எழுத்தாளர்கள் இருப்பது மாதிரியும் ஒவ்வொரு வாரமும் பிரச்சினைக்கதை போடுகிறார். இதுபோக ஆசிரியரின் கலையார்வத்தைக் காட்டத் தன் குடும்பத்துப் பெண்ணையே முழு நிர்வாணமாக்கி முகம் மறைந்து வாசகர்களைத் தலைப்புக் கொடுக்கச் சொல்கிறார். நாம் அவருடைய கலையார்வத்தை மெச்சுகிறோம். ஆனால் ஒரு கௌரவமான பத்திரிகை ஆசிரியரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண் முழு நிர்வாணமாக போஸ் கொடுப்பதை ஜீரணிக்கப் பக்குவப் படவில்லை.

மொத்தத்தில் இதயம் பேசுகிறது சவலைப்பிள்ளை மலம் கழித்தமாதிரி

*அடுத்து குமுதம்* —*நானக்*

FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010

# தீ பரவுகிறது!

ஒரே மாதிரியான விஷயங்கள் சில நேரங்களில் அடுக்கடுக்காக நடந்து வருவதைக் கவனித்திருக்கிறீர்களா?

பாலாஜியின் 'தீ' தென்னகம் முழுவதும் பரவுகிறது என்று விளம்பரம் போட்டாலும் போட்டார்கள். உண்மையிலேயே தென்னகம் முழுவதும் தீ பல்வேறு இடங்களில் பரவத் தொடங்கிவிட்டது.

1. பெங்களூரில் நடந்த சர்க்கஸ் கூடாரத்தில் தீ பற்றியது.
2. சென்னையிலிருந்து கல்கத்தாவிற்குக் கிளம்பிய விமானம் இறக்கப்படும்போது தீப் பற்றியது.
3. நூறுண்டு கால சென்னை ஸ்பென்சர் கட்டிடத்தின் பகுதிகள் தீக்கிரையாகின.
4. இரயில் விபத்தில், ஒரு போகியில் உள்ளவரைக் காப்பாற்ற அசிட்டலின் வாயு பயன்படுத்தியபோது தீப் பற்றியது.
5. கோடப்பாக்கம் அருகே உள்ள சிறு சிறு குடிசைகள் அண்மையில் தீக்குப் பலியாயின.
6. ஈரோடு வெள்ளக்கோயில் அருகே சினிமா கொட்டகை ஒன்று எரிந்து சாம்பல் ஆனது.
7. கோவை சி. ஐ. டி. மாணவர்கள் போராட்டத்தின் ஒரு பகுதியாகத் தீ வைப்பு சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன.

இவ்வளவு குறைவான காலக்கட்டத்தில் இவ்வளவு அதிகமான தீ விபத்துகள் ஏன் நடந்திருக்கின்றன?

—பு. வெங்கட்ராயன்

*சென்னை வானொலிக்கு*

# எது அளவுகோல்?

சென்னை வானொலி நிலையத்தினர் 'ஆபாசம்' 'தணிக்கை' போன்ற சொற்களுக்குத் தங்கள் அகராதியில் என்னென்ன பொருளை வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை.

முன்பு ஒருசமயம் திரைப்படத் துறையைச் சேர்ந்த கங்கை அமரனின் 'ஓரம்போ' என்ற பாடலை ஒலிபரப்பாமல் அடம் பிடித்தார்கள். அப்பாடலில் என்ன அசிங்கத்தைக் கண்டார்களோ தெரியவில்லை.

இப்போது இரவு நேரங்களில் விளம்பரதாரர் நிகழ்ச்சியில் 'தீ' என்ற படத்திலிருந்து ஒரு பாடலை ஒலிபரப்புகின்றார்கள்.

"அய்யாவுக்கு மனதிருக்கு.... அம்மாவுக்கு வயசிருக்கு
ஆரம்பமாகின்றது....
அங்கே கொஞ்சம் இடமிருக்கு.... அதை நெனச்சா
சுகமிருக்கு.... அச்சாரம் கேட்கின்றது...."

என்ற பாடல் வரிகளுக்கு இடையே 'இஸ்க்கு... இஸ்க்கு' என்ற வார்த்தைகளும் இடம்பெறும் பாடலை மட்டும் ஆபாசத்திற்கு அப்பாற்பட்ட பாடல் எனக் கருதித் தணிக்கையாளர்கள், அதை வெட்டாமல் கையைக் கட்டிக்கொண்டு வாளா இருந்து விட்டார்கள்.

இளம் உள்ளங்களில் வேண்டாத உணர்ச்சிகளை உண்டுபண்ணும் இப்பாடல் சென்னை வானொலி நிலையத்தினரின் கத்தரிக்கோலை 'எப்படியோ' ஏமாற்றிவிட்டது வருந்தத் தக்கது.

—ஆனையூர் இஸ்மாயில்.





FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010

# எரிமலை

— வே. கோ. வெங்கடாசலபதி —

பூமியின் அடியில்
புதைந்து கிடக்கின்ற
காந்த சக்திகளின்
ஒற்றுமை வடிவம் தான்
எரிமலையாம்!

எங்கள் பொறுமைகள்
எல்லை மீறும் பொழுது
இங்கும் எரிமலைகள் தோன்றுகின்றன!

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை
வரும் தேர்தல்கள் இப்போது
ஓராண்டுக்கு ஒரு முறை வந்தாலும்
மூன்று வேளை சாப்பிட்ட நாங்கள் இப்போது
ஒரு வேளை கூடச் சாப்பிடுவதில்லை.

கஜனி முகமதைப் படித்ததனால்
வேலை வாய்ப்புக்காக நாங்கள்
பதினேழு முறை படையெடுத்தாலும்
வேலை கிடைப்பதில்லை.

நாங்கள் பெற்ற பட்டங்கள்
நான்கு சட்டத்திற்குள் புகுந்து
எங்கள் வீட்டு அறையை
அலங்கரிக்கின்றன

[த. பெ. ஜெயின் கல்லூரி கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கவிதையின் ஒரு பகுதி]



## 'ரெட் ரோஸ்' × சிவப்பு ரோஜா

திரை விமர்சனம்

தமிழில் பிறந்து இந்தியில் பேசி ஆங்கிலத்தில் பெயர் சூடிக்கொண்ட சர்வதேச சமூக விரோதியின் கதை. தமிழில் இப்படத்தை, கதையை, மறந்து பார்க்கச் செய்த இளையராஜாவின் பின்னணி இசை, நிவாசின் கேமரா இந்தியில் இல்லை. படம் பட்படார்.

தமிழில் செய்ததை அப்படியே திரும்பச் செய்துள்ளார் பாரதிராஜா. ஆனால் அதற்கு R.D. பர்மன், ராஜேஷ்கன்னா இவர்களின் ஒத்திசைவு இல்லை. இறுதிக் காட்சியில் கமலஹாசன் ஒரு வெறிகொண்ட மன நோயாளியின் மூர்க்கத்தனத்தையும் துடிப்பையும் தத்ரூபமாகக் கொண்டு வந்தார். அதுவும் மொசைக்கில் உருக்கிக்கொண்டே ஓடுவது [illegible] நிறைவான கட்டம். அங்கு ராஜேஷ்கன்னா மரக்கட்டையாய் நிற்கிறார்.

அதேபோல் காரில் ஸ்ரீதேவியுடன் பேசிக்கொண்[illegible] ப்ரேக் போட்டுக் குலுங்குவதும், அதை அப்படியே [illegible] செய்து ஆடு நாற்காலியில் ஒரு குலுக்கு குலுக்கி [illegible] ஹாசன் நினைவு கூர்வதைத் தொய்வில்லாமல் காட்டு[illegible] இருந்தது. ஹிந்தியில் அதை அப்படியே செய்த[illegible] ராஜேஷ்கன்னாவின் முகபாவங்கள் வித்தியாசப்[illegible] கின்றன. நிவாசின் கேமரா கதாநாயகனின் மன[illegible] நிறங்களைக் காட்டியது ஹிந்தியில் கேமரா [illegible] இணையவில்லை.

படத்தின் தோல்விக்குக் காரணம் ஏற்கனவே [illegible] போன்ற குரூரங்கள் நிறைய ஹிந்தியில் [illegible] ராஜேஷ்கன்னாவின் நட்சத்திர மவுசு இறங்கியு[illegible] தமிழ் டைரக்டர்கள் மட்டமான கதையைத் த[illegible] குமதி செய்து வந்தார்கள். பாரதிராஜா மட்ட[illegible] திக்கு ஏற்றுமதி செய்து உள்ளார். வி[illegible] டைரக்டரல்லவா?

— [illegible]க்

FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010

# பஜாஜ் ஸ்கூட்டர் மேல் 50 மில்லியன் வழக்கு

திரு. எம். ஏ. சிதம்பரம் 1952-இல் 500 இத்தாலிய ஸ்கூட்டர்களை முதன் முதலில் இறக்குமதி செய்ய அனுமதி கோரியபோது, இந்திய சாலைகளுக்கு ஸ்கூட்டர்கள் இலாயக்கற்றவை என இந்திய அரசு அனுமதி மறுத்து விட்டது.

தற்போது இந்திய சாலைகளில் 14-இலட்சம் ஸ்கூட்டர்கள் ஓடுகின்றன. அடுத்த 8 ஆண்டுகளில் 48 இலட்சம் ஸ்கூட்டர்கள் தேவைப்படுகின்றன.

இதில் பஜாஜ் ஸ்கூட்டர்களுக்கு ஏக கிராக்கி! இதுவரை 15 இலட்சம் இந்தியர்கள் நாடு முழுவதும் அடுத்த 12 ஆண்டுகளுக்குள் பஜாஜ் வண்டியைப் பெற 100 கோடி ரூபாய்கள் பாங்குகளில் டெபாசிட் செய்து க்யூவில் நின்று கொண்டிருக்கின்றனர்.

உள்நாட்டில் இவ்வளவு செல்வாக்கையும் வைத்துக்கொண்டு, வெளிநாடுகளிலும் ஜப்பானிய, இத்தாலிய வண்டிகளுக்குக் கடும் போட்டியாக பஜாஜ் கிளம்பிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

ஒப்ராய் ஓட்டல்களைத் தவிர வேறெந்த இந்திய நிறுவனமும் ''டைம்'' பத்திரிகையில் விளம்பரம் தரமுடிவதில்லை. பஜாஜ், டைம் அட்டையிலேயே 1 இலட்சம் செலவில் மாதந்தோறும் விளம்பரம் செய்து வருகிறது.

மிகச்சிறந்த வண்டியாக உலக வீதியில் பஜாஜ் உலாவர வேண்டுமென்ற ஆவேச திட்டங்களுடன் எழுந்திருக்கிருர், பாஜாஜின் 42 வயது நிர்வாக இயக்குநர் திரு. ரகுல் பஜாஜ்.

தற்போது பஜாஜ் விற்பனையாகாத நாடுகளை எண்ணிவிடலாம். அமெரிக்காவில் மட்டும் 30,000 பஜாஜ் வண்டிகள் 1984 ஓடும்.

பஜாஜின் போட்டியாளரான வெஸ்பா தயாரிப்பு நிறுவனமான பியாஜியோ, தனக்குப் புது விற்பனை தலைவலி தரும் பாஜாஜின் மேல், 50 மில்லியன் நஷ்டஈடு கேட்டு அமெரிக்காவிலும், மே. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் வழக்குத் தொடர்ந்திருக்கிறது.

ஜப்பானிய ஹோண்டா நிறுவனம் தனது வளர்ச்சி ஆய்வுக்காக மட்டும் செலவிடும் தொகை, பஜாஜின் மொத்த தயாரிப்பு செலவைவிட அதிகம். எனினும் உலகிலேயே மிகுதியாக விற்கும் இத்தாலிய வெஸ்பாவுடனும், ஜப்பானிய ஹோண்டாவுடனும் இந்திய பஜாஜ் கடும் போட்டியில் குதித்து விட்டது.

எண்பதுகளுக்குள், ஆண்டுக்கு 10 இலட்சம் ஸ்கூட்டர்கள் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறது பஜாஜ். அரசு அனுமதிக்குமேல் உற்பத்தியைப் பெருக்கி வரும் திரு. ரகுல்பஜாஜ் கூறுகிருர் ;- ''சுதந்திர போராட்ட காலத்தில் சுதேசி இயக்கத்திற்காக என் பெற்றோர்கள் சிறை சென்ருர்கள். இந்நாட்டின் உற்பத்தியைப் பெருக்குவது பாவமென்ருல் நானும் சிறை செல்லத் தயார்! ஒருநாள் ஜப்பானியர்களையும் தோற்கடிக்க முடியும். அரசுதான் இடைஞ்சல் தராமலிருக்க வேண்டும். இந்தியா ஒருபெரிய தொழில் சக்தியாக வரக்கூடுமென்பதை ஜப்பானியர்கள் அறிந்திருக்கிருர்கள். ஆனல் நமது அரசுதான் அதை இன்னும் உணராமலிருக்கிறது.''

—எழில்



FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010



# புகை பிடிப்போர் மனைவியர்க்கும் ஆபத்து!

சாவு என்பது யாருக்கும் எந்த நேரத்திலும் வரலாம். ஆனல் புகை குடிப்பவர்களுக்குச் சாவு குதுப்மினர் உச்சியிலிருந்து குதிப்பவர்களுக்கு வரும் சாவைப் போல நிச்சயமானது; உடனே ஏற்படுவது.

'Each cigarette is a nail which is nailed by himself in his own Coffin.' —*ஆதாரம்:* Plain Truth

உயிர்கொல்லி நோய்கள் பல இருக்கின்றன. அவற்றுள் இக்காலத்தில் பரவலாகக் காணப்படுவன புற்று நோயும், மாரடைப்புமே. புகையருந்தவதால் புற்றுநோய் வருகிறது; மாரடைப்பு இளம் வயதிலேயே ஏற்படுகிறது.

டோக்கியோ புற்றுநோய் ஆய்வுக் கழகத்தின் தலைவர் Dr. தாகேஷிஹீராயாமா (Dr- Takeshi Hirayama) நீண்ட ஆராய்ச்சியின் முற்றமுடிந்த முடிவாக, வாயிலும் நுரையீரலிலும் புகையினுல் புற்றுநோய் வருகிறது என்று வெளியிட்டுள்ளார். 2,60,000 புகைஞர்களை எடுத்துக்கொண்டு ஆராய்ந்ததில் மேலும் சில உண்மைகள் புலனுயின. புகை நிறையக் குடிக்கும் ஆடவர்களைத் திருமணம் செய்து கொண்ட பெண்டிர்க்குப் புற்றுநோய் முதலில் வந்துவிடுகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

எனவே, வெளியே சென்ற கணவன் பத்திரமாக வந்து சேர வேண்டுமே என்று கவலைப்படும் இல்லத்தரசியர் தங்கள் கணவர் புகையருந்துகிருரா என்பதைக் கண்காணித்து வரவேண்டும். அந்தப் பழக்கம் உள்ளவராக இருந்தால் அதை நிறுத்துவதற்கு வேண்டிய வழிவகைகளை மேற்கொள்ளவேண்டும்.

—சுட்டி பாரதி

குறிப்பு :...இது சம்பந்தமாக ஆலோசனை தேவைப்படுவோர் சுட்டி ஆசிரியருக்கு எழுதவும்; ஆக்கப்பூர்வமான ஆலோசனை கூறுகிருேம்.



வறுமையும், சுரண்டலும், அறியாமையும் மிக்க இந்தத் தேசத்தில், இவ்வளவு மனித சக்தியையும், உழைப்பையும், நேரத்தையும் இப்படி வீணடிப்பது சரிதானா?

அமெரிக்காவின் நிலைக்கு இந்தியா முன்னேற இன்னும் சுமார் 210 ஆண்டுகள் உழைக்கவேண்டும். அதுவும் மேற்கொண்டு அமெரிக்கா முன்னேறாமல் இருந்தால்!

ஆனால் முன்னேறிய அமெரிக்காவிலோ, ருஷ்யாவிலோ, சீனாவிலோ, ஜெர்மெனியிலோ, பிரான்சிலோ, ஜப்பானிலோ மட்டுமன்றி, பிற முன்னேறிக்கொண்டிருக்கும் நாடுகளிலும் நமக்குப்பிறகு சுதந்திரம் பெற்ற நாடுகளில்கூட மக்கள் கிரிக்கெட்டைத் தீண்டவில்லை.

ஆனால் இங்கோ-காலனி ஆதிக்கத்தின் கடைசி சுவடான கிரிக்கட் பற்றித் தெரியாதவர்கள், தீண்டத் தகாதவர்களாக ஒதுக்கப்படுகிறார்கள். இறுதி 'ஸ்கோர்' தெரிந்தால், மனித வாழ்வின் 'பௌண்டரி'யை எட்டிப்பிடித்துவிடும் ஆனந்தத்தில் இருக்கும் இவர்களின் ஆனந்தம் முட்டாள்களின் சொர்க்கமல்லவா!

ஒலிம்பிக்ஸில் கிரிக்கெட் என்றொரு ஆட்டமே இடம் பெறவில்லை.

இங்கிலாந்திலும், ஆஸ்திரேலியாவிலும் கிரிக்கெட் ஸ்டேடியங்கள் இப்பொழுதெல்லாம் காற்று வாங்குவதாக செய்தி வருகிறது. வேலை வெட்டியின்றி டிரான்சிஸ்டரை வைத்துக்கொண்டு அலைய இவர்களுக்கு நேரமில்லை; வேறு முக்கிய வேலைகள் மக்களுக்குண்டு!

நமது நகரத்தில் மட்டுமின்றி வேறு நகரத்திலோ, வேறு நாட்டிலோ எங்காவது கிரிக்கெட் நடந்தால்போதும், நமது வானொலி நிலையங்கள், தேர்தல் கால உற்சாகத்தோடு, பரபரப்போடு, மணிக்கணக்கில், ஆங்கிலம்-இந்தி இரண்டிலும் 'காமெண்டரி' அடிக்க ஆரம்பித்திடும்.

ஹாக்கியில் உலக நாடுகளை இந்தியா வென்று தங்கப்பதக்கத்தை மீட்டதற்கு அரை நாள்கூட விடுமுறை விடாத அரசு, அயல்நாட்டார் இங்கு வந்து கிரிக்கெட் விளையாடத் தொடங்கிவிட்டால், நகரங்கள் தோறும் மூன்று நாட்களுக்குக் குறையாமல் பள்ளிகளை, கல்லூரிகளை, அலுவலகங்களை மூடிவிட உத்தரவு பிறப்பிக்கிறது.

பாலுக்காக அழும் குழந்தைக்குப் பல்லி மிட்டாயைக் காட்டிச் சமாதானப்படுத்துவது போல, நமது மக்களை அடிப்படைப் பிரச்சனைகளிலிருந்து திசை திருப்ப, மயக்க மருந்தாகவே கிரிக்கெட் அரசால் செல்லம் கொடுத்து வளர்க்கப்படுகிறது.

கிரிக்கெட் என்றவொரு ஆட்டத்தின் மேல் நமக்குக் கோபமில்லை! ஆனால் கிரிக்கெட்டின் பின்னால் இருக்கும் அரசியலும், போலித்தனமும், அறியாமையும் நமக்கு உடன்பாடல்ல.

ஆங்கிலப் பிரபுக்களின் பொழுது போக்கிற்காக, வெயிலில் குளிர் போக்க, அதிக உடல் உழைப்போ, அறிவுஉழைப்போ இல்லாது ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆடம்பரமான ஆட்டத்தை இந்த ஏழை நாட்டு சிறார்களிலிருந்து, அரசியல் தலைவர்கள் வரை ஊட்டம் கொடுத்து வளர்ப்பது நமது பொருளாதாரத்திற்கும், பின்னேற்றமான நிலைக்கும் ஆரோக்கியமானதல்ல!

பரபரப்பான, சுறுசுறுப்பான நவீனஉலகில் கிரிக்கெட் எந்தக் காலத்திலும் பிரபலமாக வழியில்லை. குண்டு சட்டிக்குள் உலகம் தெரியாமல் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கும் நம் இளைஞர்கள் இதனைப் புரிந்துகொண்டு மயக்கம் தெளிய வேண்டும்.

—யழில்

சென்னை:

## தெருவெல்லாம் ஆங்கில ஓசை

ஸ்ட்ராஹான்ஸ் ரோடு, ரிதர்டன் தெரு, ஜீன்ஸ் தெரு, ஜோன்ஸ் தெரு, டேவிட்சன் தெரு, ராபர்ட்சன் சந்து, ஜீனிஸ் தெரு, வீலர் தெரு, உட்ஸ் ரோடு, ஒயிட்ஸ் ரோடு, கிரீம்ஸ் சாலை, குக்ஸ் சாலை, சைடன் ஹாம்ஸ் சாலை, ஹண்டர்ஸ் ரோடு, ஆர்ம்ஸ் ரோடு, மில்லர்ஸ் ரோடு, ஹாரீஸ் சாலை, பெல்ஸ் ரோடு.

—இவை ஆங்கில நாட்டிலுள்ள தெருக்களின் பெயர்களல்ல. தங்கத் தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னையில் சில தெருக்களின் பெயர்கள்தான். 90% ஆங்கிலப் படிப்பில்லாத பாமரமக்கள் இன்னும் எவ்வளவு நாட்களுக்கு இந்தப் பெயர்களை உச்சரிப்பதில் போராடிக் கொண்டிருப்பது?

தமிழில் பெயர் வைக்க முடியாதா? தமிழில் இருக்கின்றன சில தெருப் பெயர்கள் என்று நாம் சந்தோஷப்படுவதற்கும் முடியாமல் போய்விட்டது. அந்தப் பெயர்களின் பின்னர் சாதிப்பெயர்கள் ஒட்டிக்கொண்டுள்ளன. உதாரணத்திற்கு இதோ பாருங்கள்: பெருமாள் செட்டித் தெரு, பெருமாள் நாயுடு தெரு., பெருமாள் முதலி தெரு இவற்றிலுள்ள சாதிப்பெயரை எடுத்துவிட வேண்டும் என்ற புரட்சி நடந்தது. அதன் விளைவாக மூன்று பெருமாள் தெருக்கள். ஒரே குழப்பம்!

தெருக்களுக்கு இப்படிப் பெயர் வைத்துக் கஷ்டப்படுவதைவிட 32-வது தெரு, 318-வது தெரு என்று பிரச்சினையின்றிப் பெயர் வைத்துவிடலாம். வெளிநாட்டுக்காரர்கள் யார் வந்தாலும் எளிதில் உச்சரிப்பதில் பிரச்சினையில்லை. சிக்கலே இல்லை. எண்கள் உலகத்திற்கே சொந்தமானவை.

இது விஷயமாக மாநகராட்சியும், அரசாங்கமும், அறிவுத் திறனுள்ள நகர மக்களும் சிந்திக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

—சுட்டி பாரதி






**அன்புள்ள ஜெயராம்,**

நலந்தானே! உண்மையிலேயே ஜெயராமனான உன்னை உன் திருமண நாளில் வந்து வாழ்த்தும் பேறு எனக்குக் கிட்டாது போய்விட்டது. எனினும் இக்கடிதம் என் வாயால் கூறவியலாத, என் இதயம் மட்டும் பூரித்துப் பொங்கி வாழ்த்துகின்ற வாழ்த்துக்களை எழுத்தில் சுமந்து வருகிறது.

நீயும் உன் மனைவி பூங்கொடியும் ஒருவரையொருவர் முழுமையாகப் புரிந்துகொண்ட பின்பே திருமணம் கனிந்தது என்று அறிந்து மகிழ்வுற்றேன். திருமணப்பத்திரிகை அல்லாமல் நீ அனுப்பிய 'திருமண அறிவிப்பி'லேயே நீ வித்தியாசமானவன் என்று காட்டிவிட்டாய். வரதட்சணை, சீர்வரிசை இவற்றின் பின்னணியில் ஆடம்பரமான சூழலில் அர்த்தம் புரியாத மந்திரங்களைக் கிளிப்பிள்ளைபோலச்சொல்லி முடிக்கும் ஃபார்முலா திருமணங்களைத் தூக்கியெறிந்து விட்டாயாமே! சபாஷ்! உன் மனைவியின் பெற்றோரை மனிதர்களாக மதித்து, எளிமையான முறையில் ரிஜிஸ்தர் திருமணம் செய்துகொண்ட நீயே உண்மையில் முழுமனிதன், மாமூல் மாப்பிள்ளையின் பெற்றோருக்கு வேண்டியகுணதிசங்கள் அனைத்தும்கொண்ட உன்பெற்றோரை எதிர்த்து நின்று வெற்றிகொண்ட உன் துணிவு பாராட்டிற்குரியது; இன்றைய இளைஞர்களுக்கு அதிகமாகத் தேவைப்படுவது. இறுதியாக நீயும் உன் மனைவியும் இன்பமான, சாதனை மிக்க, சமத்துவ பேதமில்லாத ஒருவர் மற்றவருக்காக வாழுகின்ற வாழ்க்கையைக் கருத்தில்கொண்டு தனிக்குடித்தனம் ஆரம்பித்து விட்டதையும் அறிந்தேன்.

இன்றைய இளைஞன் வாழ்வின் ஆரம்பத்திலேயே சந்திக்க நேரிடுகின்ற இந்தத் திருமணப்போரில் நீ ஜெயமடைந்து நான் ஜெயராமன் தான் என்று காட்டிவிட்டாய். உன்னை வாழ்த்த நான் வார்த்தைகளைத் தேடித்தவிக்கின்றேன்.

**அன்புடன்,**
**சந்திரன்.**

FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010

*பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்...*

## ‘ அந்நியன் ’

[ஆல்பெர் காம்யு எழுதிய இந்தப்பிரஞ்சு நாவல் க்ரியா-அலியன்ஸ் பிரான்சேஸ் கூட்டு வெளியீடாக வந்துள்ளது.]

யந்திர கதியான ஒரு வாழ்க்கை எப்படி இருக்கும்? நீங்கள் உணர வேண்டுமானால் பிரஞ்சு நாவலாசிரியர் காம்யூவின் அந்நியனைப்படியுங்கள். அவன் தாய் இறக்கிறாள். துக்கத்துடன் பிறர்காட்டும் போலி சோகத்தைக்கண்டு பரிதாபப்படுகிறான். முடுக்கி விடப்பட்ட யந்திரமாய்க் காதலியுடன் உறவு கொள்கிறான். கடைசியில் அவன் நண்பன் தன் எதிரியைக் கொல்ல முயலும்போது தடுத்த அதே அந்நியன் சாதாரண வெயிலின் மீதும் அது எதிரியின் கையிலுள்ள கத்தி மீது பட்டுப் பளபளப்பதைப்பார்த்தும் வெறுப்புற்று அவனே கொலை செய்கிறான். எல்லா உணர்வுகளும் அவனை பாதிக்கின்றன—பாதிக்கவுமில்லை. எல்லோரையும் நேசிக்கிறான் நேசிக்கவுமில்லை. இறுதியில் செய்த கொலைக்கு மனப்பூர்வமாகத் தண்டனையை ஏற்கிறான்.

இக்கதை இன்றைய பிரான்சின் ஸ்தம்பித்த சமூக நிலையை நன்கு காட்டுகிறது. கதாநாயகனின் மனோநிலையை ஒட்டி, நடை, உத்தி கையாளப்பட்டுள்ளது. முடிந்த மட்டும் சொல் அலங்காரங்கள் வருணனைகள் தவிர்க்கப்பட்டுள்ளன இவைகள் இல்லாமல் ஒரு படைப்பு படிப்பவரின் மனதைத் தொடுவது பெரிய விஷயம். ஆல்பெர்காம்யூ தேவஹிம்சைப் பட்டுள்ளார். இல்லாவிட்டால் இது சாத்தியப்படாது. ஆனால் இங்குள்ள பாலன்கள், மாலன்கள் ஞானக்கூத்தர்கள் மூச்சுக்கு முன்னூறு தரம் காம்யு, காஃப்கா என்று சொன்னாலும் அவர்களுடைய வித்யா கம்பீரத்தைக்கூட உணரவில்லையே என்று பரிதாபப்பட தோன்றுகிறது. உணர்ந்திருந்தால் வெறும் பெண்ணை மையமாக வைத்து அலைக்கழிவார்களா? வர்த்தக வார்த்தைகளுக்கு நகாஸ் வேலை செய்வார்களா? தரம் வேறு! தரப்போலி வேறு.

— நானக்

## இறந்தவர்களின் குரல்களைக் கேட்க முடியுமா?

மரணத்திற்குப் பின்னும் மனிதன் வாழ்கிறான். அவ்வாறு வாழ்பவனோடு தொடர்பு கொள்ள முடியும் என்ற கருத்து உலகின்பல்வேறு நாகரீகங்களில் தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கின்றது. இதைப்பற்றிய ஆய்வில் பல விஞ்ஞானிகள் தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இவர்களுள் முக்கியமானவர் (மறைந்த) கோன்ஸ்டான்ட்டிஸ் ராடிவ், Ph.D. என்ற உளவியலறிஞர்.

இத்தகைய ஆய்வுகளில் முதன் முதலில் இறங்கியவர் டாக்டர் ஜெர்கென்ஸன் என்ற ஜெர்மானிய விஞ்ஞானி. ஜெர்கென்ஸன் ஒரு கோடை காலத்தில் தன் தோட்டத்தில் நுண்ணிய மைக்ரோப்போன் மூலமாகப் பறவைகளின் ஒலியைப் பதிவு செய்தார். பிறகு அதைப்போட்டுக்கேட்டபோது இறந்த தன் உறவினர்களின் குரல்கள் சிலவும் அதில் ஒலிக்கக் கேட்டுத் திகைத்தார்.

ஜெர்கென்ஸனைச் சந்தித்து இதையெல்லாம் கண்ட ராடிவ் தானும் அந்த ஆய்வில் இறங்கினார். ஆனால் பல நாட்கள் டேப் இயங்கிய ஒலியும், சலிப்பான இவரது குரலும்தான் பதிவாகியிருந்தன. பல நாட்கள் விடாமுயற்சியுடன் தொடர்ந்த இவருக்குப் பல குரல்கள் கேட்கஆரம்பித்தன. ராடிவ் மொத்தம் 25000 குரல்களைப் பதிவு செய்துள்ளார். அவைகளுள் சில அவரது இறந்த தாய், தங்கை மோனா, லியோ டால்ஸ்டாய், மாக்சிம் கோர்க்கி, லெனின், ஹிட்லர் முதலியவர்களின் குரல்கள் ஆகும்.

இந்த ‘ஆவிகளின்’ பேச்சு அதி விரைவாகவும் சுருக்கப்பட்டு தந்திபோன்ற வாசகங்களை உடையதாகவும்உள்ளது. மேலும் குரல்கள் வெவ்வேறு மொழிகளை ஒரே வாக்கியத்தில் கலந்து பேசுகின்றன. இலக்கண முறைகள் பின்பற்றப் படுவதில்லை. இக்குரல்கள் எங்கிருந்து வருகின்றன? என்பது புதிராகஉள்ளது. இதைப்பற்றிய ஆய்வுகள் மேலும் நடந்து கொண்டிருக்கின்றன.

— ரமேஷ்

FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010

# கட்டண 'கழிப்பு'

நான் ஆசிரியர் ஆதலால் குற்றங்களையும், சிறு பிழைகளையும் கூசாமல் செய்துகொண்டிருக்க முடியாது. கண்ட இடங்களில் சிறுநீர் கழிக்கக்கூடாது என்று கட்டுப்பாடாக இருந்து வருகிறேன். இது சம்பந்தமான ஓர் அநுபவத்தை இங்கே நினைவு கூர்கிறேன்.

சென்னை பூங்கா ரயில் நிலையத்திற்கு ஒருநாள் வந்தபோது சிறுநீர் கழிக்க அங்கும் இங்கும் திரும்பினேன். அழகான சலவைகற்களால் இழைக்கப்பட்ட கட்டணக்கழிப்பிடம் கண்ணில் பட்டது. உள்ளே நுழையும்போது ஒரு சிறியபையன் "5 காசு எடுங்க சார்" என்றான்.

சோதனைபோல அன்று பெட்டியைத்திறந்தபோது பத்து ரூபாய் நோட்டாகவே இருந்தது. "சில்லரையாகக்கொடுங்க சார்" என்று பையன் நுழைவாசலில் நின்றுவிட்டான். தர்மசங்கடமான நிலை.

அதற்குள் இயற்கையின் அவசரம் எல்லை மீறிக்கொண்டிருந்தது. வேறு வழியில்லாமல் வெளியேபோய் எல்லோரையும் போலவே அசுத்தம் செய்து வந்தேன். நம்நாட்டில் ஒண்ணுக்குப்போக 5 காசு தரமுடியாத ஏழைகள் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். எவ்வளவோ அனுவசியங்களுக்கு பணவிரயம் செய்யும் அரசு மனிதனின் இந்த அடிப்படை பிரச்சனைக்கு வசதி செய்து கொடுக்க முடியவில்லையா?

மலேசியாவில் ஒவ்வொரு சிறிய கடைகளிலும்கூடப் பொதுமக்கள் பயன்படுத்த சுத்தமான கழிப்பிடங்களைப் பராமரித்தால்தான் லைசென்சே தருவார்கள். அதே முறையை இங்கேயும் கொண்டு வரலாம். தெருசந்திப்புக்களில் அமைக்கப்பட்டுள்ள ரவுண்டானுக்களை, வங்கிகள் நிர்வகிப்பது போல இலவசக் கழிப்பிடங்களையும் நிர்வகித்தால் இன்னும் பலமடங்கு பயனாக இருக்கும்.

தெருவில், மலமும் சிறுநீரும் கழிக்கும் ஒரே நாடு இந்தியா தான் என்று வெளிநாட்டுக்காரர்கள் நம்மை இரண்டு கால் விலங்குகளாகப் பார்ப்பது எப்போது மாறும்? —சுட்டி பாரதி

# ஆசிரியர்கள்



தேவை !

பல நூறு ஆசிரியர்கள் உடனே தேவை !!
எம். ஏ., எம். எஸ்ஸி., எம். காம் தேறியோர்
பயிற்சிக் கல்லூரியில் பல்லாண்டு படித்தோர்
சட்டம் மருத்துவம் சரியாய்த் தெரிந்தோர்
மொழிநூல் அனைத்தும் முற்றுறக் கற்றோர்
எல்லோரும் இங்கே ஏராளம் உண்டு!
முனைமழுங்கிய குண்டுசிக் குவியலை
மொத்தமாய்த் தயாரிக்கும் தொழிற்சாலை போல
முதுகெலும்பில்லாப் பட்டதாரிகளை
மொத்தமாய் நாங்களும் தயாரிக்கின்றோம்!
விடுங்கள் எங்களை!


இனிமேல்.........
மனிதாபிமானம் மற்றும் நல்ல
உயிராபிமானம் போன்ற பண்பை
மக்கள் மனதில் பதிய வைக்க
பலநூறு ஆசிரியர்கள் உடனே தேவை!
விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம் !!

—மதுமலர்



FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010

## ஓய்விலே தாக்கும் மாரடைப்பு நோய்!



மருந்துவம்

மாரடைப்பு நோய் 52% ஓய்வு எடுக்கும் நேரத்தில்தான் வருகிறது. பல பிரபல மனிதர்களின் சாவு இப்படித்தான் ஏற்பட்டிருக்கிறது.

டாஷ்கண்டில், வெற்றிகரமாகப்பேச்சு வார்த்தைகளை முடித்துக் கொண்டு, நமது முன்னாள் பாரதப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி நிம்மதியாக ஓய்வெடுத்தார். ஆழ்ந்த துயிலில் மூழ்கினார். அந்த ஆழ்ந்த துயில் மீளாத் துயிலாகி விட்டது.

ஒரு தலைமுறைக்கு முன், சென்னையிலேயே தலைசிறந்த மருத்துவர்களாக விளங்கிய டாக்டர் இரத்தினசாமி, டாக்டர் மாசிலாமணி, தைரியம், முத்தையா ஆகியோர் அத்தனை பேரும் ஞாயிற்றுக்கிழமை அன்றுதான் இறந்தனர். திடீரென மாரடைப்பு நோயால் இறந்தனர்.

புகழ்மிக்க இந்த மருத்துவர்கள் எல்லாம், வாரம் முழுவதும் ஓய்வு எதுவுமின்றி, இரவைப்பகலாக்கி உழைத்தவர்கள். ஞாயிறு ஒருநாள்மட்டுமே இவர்களுக்குக் கொஞ்சம் ஓய்வு. அத்தகைய ஓய்வு நாளிலேயே, மாரடைப்பு ஏற்பட்டு இவர்கள் இறந்திருக்கிறார்கள்.

இன்னொரு வியப்பு என்னவென்றால், டாக்டர் இரத்தினசாமி அவர்கள், கடலூரில், மாரடைப்பு நோய் பற்றி மருத்துவர் கூட்டமொன்றில் சிறப்புரை ஆற்றிக்கொண்டிருக்கும் போதே, நெஞ்சு வலி ஏற்பட்டு, மாரடைப்பால் இறந்தார்.

சுறுசுறுப்பாக இடைவிடாத வேலை புரிவோருக்கு மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு மிகவும் குறைவு.

பஸ் நடத்துநரை விட, ஓட்டுநர்க்கும், அஞ்சல்காரரை விட அஞ்சல் நிலையத்தில் உட்கார்ந்து வேலை செய்யும் அலுவலர்க்கும் மாரடைப்புநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

ஆதாரம் : மாரடைப்பு நோய் வாராமல் தடுப்பது எப்படி?
சென்னை நகர ஷெரீப் டாக்டர் பி. எம். ரெக்ஸ்.

## இது ஆபாசப் படமல்ல!

ரஷ்ய மியூஸியத்தில் ஓர் ஓவியம் உள்ளது. அதில் ஒரு கிழவன் ஒரு இளம்பெண்ணின் மார்பில் பால் அருந்திக்கொண்டிருக்கிறான். அருகில் ஒரு சிறு குழந்தையை ஒரு கிழவி பிடித்து அழுத்திக்கொண்டிருக்கிறாள். குழந்தை கதறிக்கொண்டிருக்கிறது. இவர்களைச் சுற்றி ஜாரின் வீரர்கள் கைகளில் துப்பாக்கிகளோடும் ஈட்டிகளோடும் நின்றுகொண்டிருக்கின்றனர். இந்தப் படம் உண்மையில் ஒரு மாபெரும் ஆபாசப்படம்தான். ஆனால் அதன் பின்னணி என்ன தெரியுமா? அந்தக் கிழவன் ஒரு புரட்சிக்காரன். ஜார் மன்னனுக்கு எதிராகப் புரட்சிசெய்தமையால் சிறையில்தள்ளப்பட்டபின் அவனுக்குத் தண்டனை என்னவெனில் அவன் உண்பதற்கோ குடிப்பதற்கோ எதுவும் கொடுக்கக்கூடாது. தாகத்தினால் அவன் சாகவேண்டும் என்பது ஜாரின் உத்தரவு.

இக்கிழவனைப் பார்ப்பதற்காக அவனது மனைவியும், திருமணமான மகளும், மகளின் கைக்குழந்தையும் வருகின்றனர். கிழவன் 'தாகம் தாகம்' 'தண்ணீர் தண்ணீர்' என்று தவிக்கிறான். சுற்றி நிற்கும் வீரர்கள் பேசாமலிருக்கின்றனர். இதைக் கண்ணுற்ற அவனது மகள் 'அப்பா தாகத்தினால் தவிக்கிறார், அவருக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்' என்று கெஞ்சுகிறாள். 'தாகத்திற்குத் தண்ணீர் கொடுக்கக்கூடாது! என்பது உத்தரவு. அதனால் கொடுக்க முடியாது' என்கின்றனர் காவலர்கள்.

'தண்ணீர் மட்டும்தானே கொடுக்கக்கூடாது?' - இது இளம்பெண்.

'ஆம்! தண்ணீர் மட்டும்தான் கொடுக்கக்கூடாது' - இது வீரர்கள்,

'சரியாய்ச் சொல்லுங்கள், தண்ணீர் மட்டும்தானே கொடுக்கக்கூடாது?' என்று மீண்டும் அவ்விளம்பெண் கேட்கிறாள்.

'ஆம்! தண்ணீர் மட்டும்தான் கொடுக்கக்கூடாது' என்கின்றனர் வீரர்கள்.

உடனே, 'வாருங்கள் அப்பா நான் உங்கள் தாகத்தைத் தணிக்கின்றேன்' என்ற அவ்விளம்பெண், தனது மார்பகத்தைத் திறந்து பாலூட்டுகிறாள் தந்தைக்கு. இவ்விடத்தில் குழந்தை தாயாகிவிட்டது. தந்தை குழந்தையாகி விட்டார். இதில் ஆபாசத்திற்கு இடமில்லை என்று அப்படத்தில் விளக்கம் கிடைக்கிறது. எனவே ஆபாசம் என்பது எழுத்திலோ அல்லது ஓவியத்திலோ அல்ல. எழுதுகிறவனின் பார்வையில், கருத்தில்தான் இருக்கிறது என்பது தெளிவு.

*—பெண்ணுரிமை இயக்கக் கூட்டத்தில்*
***திரு.சு. சமுத்திரம்** அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின்போது*



FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010

## சாதிகள் ஒழியவில்லை பாப்பா!

இது என்ன நாடு? ஒரே சாதி, சமய வெறியாட்டங்கள் இன்னமும் நடைபெறுகின்றனவே. எப்போது பார்த்தாலும் ஜாதிமாநாடுகளும், சிறப்பிதழ்களும் வந்தவண்ணமாகவே இருக்கின்றன. இதில் அருவெறுப்புக்கு என்ன இருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம்.

அவையெல்லாம் சாதி, சாதியாகப் பிரிந்து நின்று தம் பெருமைகளைத் தம்பட்டம் அடித்துக்கொண்டிருக்கின்றன. இந்த பத்திரிகைக் காரர்களும் நன்கு கூர்சீவி விடுகிறார்கள். தட்டார்கள் என்ற பொற்கொல்லர்களை 'விசுவகர்மா' என்று பெயர்சூட்டி, அந்தச்சாதியில் மேலே தலைதூக்கி வந்தவரை படம்போட்டு விளம்பரம் செய்து சிறப்பிதழ் போடுகிறார்கள். 22-2-81 அன்று நகரத்தார் நலஉரிமை மாநாடு காரைக்குடியில்! செல்வச் செட்டியார்கள் தங்கள் சாதிப்பெருமையை நிலைநாட்டக் கூட்டம் போடுகிறார்கள். சாதிப்பிளவுகளைச் சரிகட்டி மூடிவிட வேண்டும் என்று வாய்ப்பந்தல் போடும் அரசியல்வாதிகள் இத்தகைய சாதிக் கூட்டங்களில் கலந்து கொள்ளலாமா? தாட்சணியம் பார்க்காமல் சொல்வதற்கு அரசியல்வாதிக்கு தைரியம் இருக்க வேண்டாமா?

இப்படி ஆங்காங்கே சௌராஷ்டிர மாநாடு, செங்குந்தர் மாநாடு, நாடார் மகாஜன மாநாடு இப்படித் தமிழ் நாடெங்கிலும் ஒரே சாதி அடிப்படைக் கூட்டங்கள்!


இந்தமாதிரியெல்லாம் சாதிப்பெயரில் கூட்டம்அமைத்து உரிமைக்குரல் கொடுக்காமல் இதுவரை இருந்தவர்கள் பிராமணர்கள். வந்தாலும் வந்தது இந்த சாவித்திரி படம். உடனே கச்சைக்கட்டிக்கொண்டு கிளம்பிவிட்டார்கள். வேலூரில் பிராமணர் சங்கத்தின் மாநில அமைப்பு பிரம்மாண்டமாக அமைக்கப்போகிறார்களாம்.

இப்படி வரவரச் சாதிவெறி அதிகமாகிக்கொண்டு வருகிறதே என்று சுட்டிப்பையன் தட்டிக்கேட்கிறான். சமுதாயமே அவனுக்குப் பதில் சொல். —சுட்டி பாரதி

*எழும்பூர் ரயில் நிலையத்தில்*

## காதில் பட்டது

மாலை மணி 6-30. சென்னை எக்மோர் ரயில் நிலையத்தில் 1-வது பிளாட்பாரம். சிவகாசிக்குச் செல்லும் நண்பர் ஒருவரை வழியனுப்ப வந்திருக்கிறேன்.



''சார், சார் 'G' கம்பார்ட்மென்ட் எந்தப் பக்கம் சார்?'' வியர்த்து விறுவிறுத்துக் கொண்டிருக்கும் நபர் ஒருவர், கறுப்புக் கோட் அணிந்த டிரெயின் கண்டக்டரிடம் கேட்கிறார்.

சற்று நிமிர்ந்து, செத்த புழுவைப் பார்ப்பது போல் அந்த நபரைப் பார்த்த கண்டக்டர் எஞ்சின் இருக்கும் திசையில் கையைக் காட்டுகிறார்.

நான் தொடர்ந்து நண்பரிடம் பேசிக்கொண்டிருக்கிறேன்.


சுமார் 20 நிமிடம் கழித்து ''சார், அந்தப் பக்கம் எஞ்சின்வரை போய்ப் பார்த்துவிட்டேன். மூன்று நான்கு கண்டக்டர்களையும் கேட்டுவிட்டேன். அவர்கள் மாற்றி, மாற்றி எதிர் எதிர் திசையில் காட்டுகிறார்கள். கொஞ்சம் பிளீஸ் 'G' கம்பார்ட்மெண்ட் எந்தப் பக்கம் என்று சொல்லுங்கள் சார்'' பரிதாபமாகக் கெஞ்சும் குரல். சற்றுமுன் பார்த்த அதே நபர்.

அவரிடமிருந்து டிக்கெட்டை வாங்கிப் பார்த்த கண்டக்டர் ''இது 'G' யாக இருக்காது 'C' யாக இருக்கும்'' என்கிறார். அல்லாடிக் கொண்டிருக்கும் நபர் ''என்ன சார் தெளிவாக 'G' என்று எழுதியிருக்கிறதே சார்'' ''எழுதும்போது தப்பா எழுதியிருப்பார்கள். இந்த ரயிலில் 'G' என்று கம்பார்ட்மெண்டே கிடையாது. C 24-தான் இது. இதோ என் கம்பார்ட்மெண்ட் தான்.'' மிக சாதாரணமாகக் கூறுகிறார்.

''இரயில்வே அலுவலர்கள் செய்யும் ஏனோ தானோ வென்ற, அக்கறையற்ற வேலைகளுக்குத் தண்டனை அனுபவிப்பது அப்பாவி பயணி சார். மணிக்கணக்கில் க்யூவில் நின்று ரிசர்வேஷன் செய்கிறோம். அப்படி என்ன பரபரவென்று டிக்கட் கொடுக்கிறார்களா? மிக மிக சாவகாசமாகக் கொடுக்கிறார்கள். ஒரு டிக்கட் கொடுக்க ஒருமணி நேரமாகிறது. இந்த லட்சணத்தில் ஒழுங்காகவாவது எழுதித் தொலைக்கக் கூடாதா? அதிலும் ஆயிரம் தப்புகள். திண்டாடுவது நாம். கம்பார்ட்மென்ட்களை A, B, C, என்று ஒரு வரிசையாகக்கூடப் போடுவது கிடையாது. இந்த TC களை ஏதாவது கேட்டால் யாரும் பொறுப்பான பதில் சொல்வது கிடையாது. நாம் நம் பணத்தைக் கொடுத்துப் பயணம் செய்கிறாற்போலவே இல்லை. ஏதோ இந்த ரயில்வேக்காரர்கள் எல்லாம் அவரவர் வீட்டுச்சொத்தை விற்று நம்மைத் தர்மத்திற்கு ஏற்றிக்கொண்டு போவதுபோல் ஒரு நினைப்பு. தலை எழுத்து சார்''- அலைந்து நொந்த பயணி அருகில் இருப்பவரிடம் ஆதங்கத்தில் புலம்பிக்கொண்டிருக்கிறார்.

இரயில் புறப்பட்டுவிட்டது. அதுவரை காதில் கேட்டது. —சுயராஜ்.

FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010



## ATLASOLEX MOPED

CHEAPEST AND THE BEST MOPED ON THE ROAD

**Price : Rs. 2600 NETT**

- Fuel Consumption : Approx 75 km/per Litre
- Maximum H. p. : 0.8 H. P.
- Thc Moped is of FRENCH ORIGIN
- IMPORTANT PARTS MADE IN FRANCE
- Front wheel mounted engine for greater milage
- ATTRACTIVELY designed in Beautiful Colours

Pay Rs. 800 only and balance by instalment.

Authorised Dealers :
TOOLS & TOOLS
7, State Bank Street,
Mount Road, Madras-600002 Phone : 812335

## ஜப்பானிய சகோதரி பேசுகிறார் !

தாகம் நிறைந்த பயணத்துடன் வந்துள்ள ஜப்பானிய சகோதரி சிஸ்டர் பியுமிங்கோ ப்பியுஜிட்டாவிடம் ஜப்பானைப் பற்றிக் கேட்ட கேள்விகளில் இன்னும் சில தொடர்ந்து இடம் பெறுகின்றன.

*கேள்வி: காவல்துறை, குற்றங்கள் இவை உங்கள் நாட்டில் எந்த விதத்தில் இருக்கின்றன ?*

பதில் : கொலை, கொள்ளை போன்ற குற்றங்களைச் செய்வோர் நிச்சயம் தப்ப முடியாது. காரணம் எங்களது திறமை மிக்க போலிஸ்துறை. பதிவுசெய்யப்பட்ட குற்றங்களில் 100% கண்டுபிடிக்கப்படும் ஒரே நாடு ஜப்பான்தான். சாலையில்OVER SPEEDல் கைதானவர்கள்தான் அதிகம். பொதுவாகத் திருட்டு என்பது கேள்விப்படாத ஒன்று. எங்கும் எதையும் பூட்டும் வழக்கம் கிடையாது. பல கதவுகள் பேப்பரினாலானவை. இங்கு டெலிபோனைக்கூடப் பூட்டி வைப்பதைக்கண்டு வியப்புற்றேன். இப்போதுதான் தலைநகரான டோக்கியோவில் சில வெளிநாட்டுகாரர்களினால் திருட்டு அதிகமாகி இருக்கிறது. எனவே டோக்கியோவில் உள்ள சில ஓட்டல்களில் அறைகளைப் பூட்டும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது,

எப்போதாவது ஒரு முறை கற்பழிப்பு சம்பவம் நடப்பதுண்டு. பொதுவாக இரவில் 1மணி 2மணி அளவில்கூடப் பெண்கள் பயமின்றி நடந்து வரமுடியும். அமெரிக்க நகரங்கள் போல எங்கள் நகரங்களில் பயம் துளியும் கிடையாது.

*கே : வருமானவரி பிரச்சினை மக்களுக்கு எப்படி ?*

ப : வருமானவரி பாரங்கள் ஆண்டிறுதியில் மக்களுக்கு அனுப்பப்படும். எவ்வளவு வரிபோடவேண்டும் என்பதை நாமே நிர்ணயித்து பூர்த்தி செய்து அனுப்பவேண்டும். அதிகமாகப்போட்டிருந்தால், அந்த இலாக்கா நாம் அனுப்பிய பணத்தைத் திருப்பி அனுப்பி விடுவார்கள்.

—*பேட்டி : எழில் நிலா*

FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010

# R S C

**SOUND PEOPLE IN SOUND TECHNOLOGY**

**Manufactures & Sells as per your taste, as per your order.**

**HI—FI Stereo/Mono turntables**

**Cassette decks, Amplifiers & Speaker Systems**
**Available wattages: 10, 15, 30, 40, 60, 80, 100, 120, 150 watts per channel (Music power)**

Service & Repair Undertaken For:

* T V * RADIO
* TAPE RECORDERS
* TURNTABLES * HI—FI AUDIO EQUIPMENTS ETC.

At very resonable RATES
DROP A POST CARD FOR HOME SERVICE


**R S C**
**12, II Cross Street**
**Venkatesapuram Colony**
**AYANAVARAM, MADRAS-23.**






# நம்மை ஏமாற்றும் பத்திரிகை விளம்பரங்கள்!

நாடு முழுதும் பரந்து கிடப்பதாலும், நுகர்வோர் என்ற உணர்வு **(Consciousness)** இன்மையாலும் நுகர்வோர் அமைப்புகள் சரியானபடி அமையவில்லை. நாட்டின் கல்வியில் பின் தங்கிய நிலையும், கருத்துப்பரிமாறலில் உள்ள இடைவெளியும் பெரிய தடைகளாக அமைகின்றன. அதேசமயம் உற்பத்தியாளர் - விற்போர் நல்ல முறையில் அமைப்புகள் பெற்றுள்ளனர் **(Organised)**. அவர்களுக்கு உதவ பத்திரிகைகள்!



இந்த இடத்தில் பத்திரிகைகளின் பங்கைப் பற்றிச் சில வரிகள்: மக்களாட்சியின் அங்கங்களாகச் சட்டமன்றம், நீதித்துறை, நிர்வாகத்துறை என வரையறுத்துள்ளனர் அரசியல் வல்லுநர். பொதுமக்களின் கருத்தை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிப்பதன் வாயிலாகப் பத்திரிகைத்துறை மக்களாட்சியின் நான்காவது அங்கமாக அங்கீகாரம் அடைந்துள்ளது.

ஆகவே பத்திரிகைகள் மக்களிடையே பொறுப்புணர்ச்சியுடன் நடக்க வேண்டியது தர்மமாகி விடுகிறது. கல்வியில் பின்தங்கியவர்களாக, புதிதாகப் படிக்கத் தொடங்கும் பெரும்பான்மையோர் அச்சில் வருவதை வேதமாக எண்ணுகின்றனர். இத்தகைய எளிதில் நம்புகின்ற மக்களை விளம்பரங்களால் விலைக்கு வாங்க முயலும் வியாபாரிகள், விளம்பர வருமானத்துக்காக எதையும் விளம்பரம் செய்யும் பத்திரிகைகள் - இவைதான் பண்டங்களை நுகர்வோருக்கு அறிமுகம் செய்யும் ஆரம்பக்கட்டமாக உள்ளன. ஆகவே நுகர்வோர் நலம்காக்க முதல்படி பத்திரிகை விளம்பரங்களில் ஒரு கண்ணியம் உருவாக வேண்டும்.

விளம்பரங்களில் இல்லாத பெருமைகளைப் பறைசாற்றுவோர், தண்டிக்கப்பட ஒரு அமைப்பு வேண்டும். விளம்பர வாசகங்களின் நிலை ஒரு சட்டரீதியான ஒப்பந்த வாசகமாக, விளம்பரம் செய்வோரை வெளியிடும் பத்திரிகையை கட்டுப்படுத்துவதாக அமைய வழிவேண்டும். இதற்கெனச் சட்டமியற்றலாம். (பத்திரிகை சுதந்திரத்துடன் இதைக் குழப்ப வேண்டாம்) **"Press - Council of India"** இதற்காக ஒரு **"Code - of - Conduct"** உருவாக்கலாம்.

[வாசகர்களின் சொந்த அனுபவங்களை அப்புறம் இந்தப் பகுதியில் பகிர்ந்திட அழைக்கிறோம்.]



FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010

## வாசகர்களிடம் கொஞ்சம் தனியாக . . .

கடுகைத் துளைத் தேழ் கடலைப்புகட்டும் இந்த இன்னொரு பரிசோதனையில் துணை நின்றவர்கள்:—

மாணவர்கள் : சுவிசாசிசுபரன். ஆர். இராமகிருஷ்ணன், பாலாஜி, சுதீந்தரன், அருள்மணி, லட்சுமிநரசிம்மன், குருமூர்த்தி இன்றும் பின்னணியில் விளம்பரம் விரும்பா ஆசிரியர்கள், கலைஞர்கள், புதியவர்கள்.

* முக்கியமாகச் சென்ற இதழை எதிர்பார்த்ததற்கு மேல் வரவேற்றுச் சொல்லாலும் செயலாலும் ஆதரவு தந்த வாசகர்கள்.

அட்டை, உள் ஓவியங்கள் : எம். ஷேக் அப்துல் காதர், பம்மல்.

* சுட்டிபற்றி விமர்சனங்களை, படைப்புக்களை வரவேற்கிறோம்.

* மாமூல், பிரபல எழுத்தாளர்களின் படைப்புகளுக்குச் சுட்டியில் இடமில்லை.

* புதிய எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள் பாரபட்சமின்றி, சிபாரிசின்றி கவனிக்கப்படுவார்கள். சுட்டியின் அளவிற்கும் தரத்திற்கும் ஏற்றவை நிச்சயம் வெளியிடப்படும்.

* அடுத்த இதழில் கேள்வி பதில் இடம் பெறும். பயனுள்ள கேள்விகளைச் சுருக்கமாக கேளுங்கள். சிறந்த சில கேள்விகளுக்கு நறுக்குத் தெரித்தாற்போலப் பதில் கிடைக்கும்.

* 12 இதழ்கள் பெற சந்தா ரூபாய் 3.00 அனுப்புங்கள்.

* அடுத்த இதழ்— ஏப்ரல்—15

* எல்லாத் தொடர்புகளுக்கும் :—

ஆசிரியர்,
சுட்டி
8, கஜபதி தெரு
சென்னை-600 030.


With Best Compliments From

**TIFFIN'S BARYTES, ASBESTOS AND PAINTS LIMITED**

MINE OWNERS,
MINERAL MERCHANTS AND EXPORTERS

"Andhra Chamber Building"
127, Angappa Naick Street,
MADRAS-600 001

Tel : No. 24818
Grams : "JESMONDE"
Telex No : 7524 (A/B TIFFINS)


FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010


NOVEL INSTALMENTS

Pay
Rs. 200/-
ONLY
Take home a
Mixie, Wet grinder,
Steel Almirah, Water Heater,
Washing Machine,
Tape Recorder.

doss
DEPENDABLE DEALER

Congress Building (North end) Mount Road. Phone: 446464 | Anna Nagar. Phone: 614063.

NOVEL INSTALMENTS



Pay Rs.500/-
ONLY
Take home a
Television

doss
DEPENDABLE DEALER

Congress Building (North end) Mount Road. Phone: 446464 | Anna Nagar. Phone: 614063.


ஆசிரியர், வெளியிடுவோர்: நிர்மலா சுந்தர், 6, கஜபதி தெரு, சென்னை-30.
அச்சிட்டோர்: லயன் பிரிண்டர்ஸ், 1569, அண்ணாநகர், சென்னை-40.

இது தனிச்சுற்றுக்கு மட்டும் வெளியாகும் மாத வெளியீடு. சுட்டியின் கட்டுரைகளின் கருத்துக்களுக்கு எழுதுவோரே பொறுப்பேற்கின்றனர்.

FREE E Books - www.thamizham.net - TM 1853 / Nov 2010